





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपे

# காப்பிடல்

*kAppidal*

# காப்பிடல்

## ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த

***இந்திரனோடு பிரமன்***
***ஈசன் இமையவர் எல்லாம்***
***மந்திர மா மலர் கொண்டு***
***மறைந்துவராய் வந்து நின்றார்***
***சந்திரன் மாளிகை சேரும்***
***சதுரர்கள் வெள்ளறை நின்றாய்***
***அந்தியம் போது இதுவாகும்***
***அழகனே காப்பிட வாராய்*** [1] [0192]

கன்றுகள் இல்லம் புகுந்து
கதறுகின்ற பசுவெல்லாம்
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி
நேசமேல் ஒன்றும் இலாதாய்
மன்றில் நில்லேல் அந்திப் போது
மதிள் திருவெள்ளறை நின்றாய்
நன்று கண்டாய் என்றன் சொல்லு
நான் உன்னைக் காப்பிடவாராய் [2] [0193]

செப்போது மென் முலையார்கள்
சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு
அப்போது நான் உரப்பப் போய்
அடிசிலும் உண்டிலை ஆள்வாய்
முப்போதும் வானவர் ஏத்தும்
முனிவர்கள் வெள்ளறை நின்றாய்
இப்போது நான் ஒன்றும் செய்யேன்
எம்பிரான் காப்பிட வாராய் [3] [0194]

கண்ணில் மணல் கொடு தூவிக்
காலினால் பாய்ந்தனை என்றென்று
எண் அரும் பிள்ளைகள் வந்திட்டு
இவர் ஆர் முறைப் படுகின்றார்
கண்ணனே வெள்ளறை நின்றாய்
கண்டாரோடே தீமை செய்வாய்
வண்ணமே வேலையது ஒப்பாய்
வள்ளலே காப்பிட வாராய் [4] [0195]

# காப்பிடல்

பல்லாயிரவர் இவ்வூரில்
பிள்ளைகள் தீமைகள் செய்வார்
எல்லாம் உன் மேல் அன்றிப் போகாது
எம்பிரான் நீ இங்கே வாராய்
நல்லார்கள் வெள்ளறை நின்றாய்
ஞானச் சுடரே உன் மேனி
சொல் ஆர வாழ்த்தி நின்றேத்திச்
சொப்படக் காப்பிட வாராய் [5] [0196]

கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்
கரு நிறச் செம்மயிர்ப் பேயை
வஞ்சிப்பதற்கு விடுத்தான்
என்பதோர் வார்த்தையும் உண்டு
மஞ்சு தவழ் மணி மாட
மதிள் திரு வெள்ளறை நின்றாய்
அஞ்சுவன் நீ அங்கு நிற்க
அழகனே காப்பிட வாராய் [6] [0197]

கள்ளச் சகடும் மருதும்
கலக்கழிய உதை செய்த
பிள்ளையரசே
நீ பேயைப் பிடித்து முலை உண்ட பின்னை
உள்ளவாறொன்றும் அறியேன்
ஒளியுடை வெள்ளறை நின்றாய்
பள்ளிகொள் போதிது ஆகும்
பரமனே காப்பிட வாராய் [7] [0198]

இன்பம் அதனை உயர்த்தாய்
இமை அவர்க்கென்றும் அரியாய்
கும்பக் களிறட்ட கோவே
கொடுங்கஞ்சன் நெஞ்சினில் கூற்றே
செம் பொன் மதிள் வெள்ளறையாய்
செல்வத்தினால் வளர் பிள்ளாய்
கம்பக் கபாலி காண் அங்குக்
கடிதோடிக் காப்பிட வாராய் [8] [0199]

## காப்பிடல்

இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு
　　எழில் மறையோர் வந்து நின்றார்
தருக்கேல் நம்பி சந்தி நின்று
　　தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள்
திருக்காப்பு நான் உன்னைச் சாத்தத்
　　தேசுடை வெள்ளறை நின்றாய்
உருக்காட்டும் அந்தி விளக்கு
　　இன்றொளி கொள்ள ஏற்றுகேன் வாராய் [9] [0200]

*போதமர் செல்வக் கொழுந்து*
　　*புணர் திரு வெள்ளறையானை*
*மாதர்க்கு உயர்ந்த அசோதை*
　　*மகன் தன்னைக் காப்பிட்ட மாற்றம்*
*வேதப் பயன் கொள்ள வல்ல*
　　*விட்டுசித்தன் சொன்ன மாலை*
*பாதப் பயன் கொள்ள வல்ல*
　　*பத்தர் உள்ளார் வினை போமே* [10] [0201]